# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 3.4.2026 | காலை 11 மணி | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை |
| ” | மாலை 4.00 மணி | ” | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் |
| ” | இரவு 8.00 மணி | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 4.4.2026 | காலை 11.00 மணி | திருச்சி தெற்கு | மணப்பாறை |
| ” | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | திருவரங்கம் |
| ” | மாலை 6.00 மணி | கரூர் | குளித்தலை |
| ” | இரவு 8.00 மணி | ” | கிருஷ்ணராயபுரம் |
| 5.4.2026 | காலை 11.00 மணி | திருப்பூர் கிழக்கு | காங்கேயம் |
| ” | மாலை 4.00 மணி | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| ” | மாலை 6.00 மணி | கோவை தெற்கு | சூலூர் |
| 5.4.2026 | இரவு 8.00 மணி | கோவை வடக்கு | கவுண்டம்பாளையம் |
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



சிவகங்கை மாவட்டம் கோட்டையூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் சுரேஷ், அ.தி.மு.க.வில் இருந்து விலகி மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார். உடன் கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன், கவுன்சிலர் ராமு உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் சோமாஸ்கந்தன் எழுதிய ‘வழிகாட்டும் திராவிடம்’ நூலினை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

## அமைச்சர் கே.என்.நேரு பெற்றுக்கொண்டார்!

திருவாரூர், ஏப். 3-
திருவாரூர் சோமாஸ்கந்தன் எழுதிய ‘வழிகாட்டும் திராவிடம்’ என்ற நூலினை முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.03.2026 அன்று திருவாரூரில் வெளியிட்டார்.

இந்நூலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளையும், திராவிட மாடல் முதல்வர் ஐந்தாண்டுகளில் செய்த சாதனைகளையும், மக்களிடம் ஏற்படுத்திய தாக்கங்களையும், கடந்து வந்த பாதைகளையும் காட்சியோடு பட்டியல் இடப்பட்டுள்ளது.

பா.ஜ.க. அரசு தமிழ் நாட்டிற்கு இழைத்த அநீதிகளைப் பட்டியலிட்டும், எடப்பாடி ஆட்சியினை ஒன்றிய பா.ஜ.க. அரசு கைப்பாவையாக வைத்து அடக்கி ஆண்டு தமிழகத்திற்கு இழைத்த அநீதிகளையும் இந்நூலில் பட்டியலிட்டுள்ளார்.

இந்நூலினை முதலமைச்சர் வெளியிட முதல் பிரதியினை அமைச்சர் கே.என். நேரு, பெற்றுக்கொண்டார். உடன் அமைச்சர் டி.ஆர். பி.ராஜா மற்றும் முன்னாள் அமைச்சர் மதிவாணன், மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ. (ம) நாகை மாவட்டச் செயலாளர் கௌதமன், SDPI கட்சி மாநில தலைவர் முபாரக் மற்றும் தாட்கோ தலைவர் இளையராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

### முடிதிருத்தும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் தேவையான

# உதவிகள் பெற நடவடிக்கை என தேர்தல் அறிக்கையில் அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்க மாநில முதன்மைச் செயலாளர் அ.ப.தனசேகர் அறிக்கை!

சென்னை, ஏப். 3 -
திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில், முடி திருத்தும் தொழிலாளர்களின் 2 கோரிக்கைகள்இடம்பெற்றுள்ளதற்கு நன்றி தெரிவித்து தமிழ்நாடு ஹேர் ட்ரெஸ்ஸர்ஸ் யூனியன் சார்பில் அறிக்கையினை தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்க முதன்மைச் செயலாளர் கோவூர் அ.ப.தனசேகர் வெளியிட்டார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கடந்த மார்ச் மாதம் 13-ஆம் தேதி தமிழ்நாடு ஹேர் ட்ரெஸ்ஸர்ஸ்ய யூனியன், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மாவட்ட செயற்குழு கூட்டம் சென்னை, மேடவாக்கம், பாவலரேறு தமிழ்க்களம் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மருத்துவர் சமுதாயம் மற்றும் முடிதிருத்தும் தொழிலாளர்கள் குறித்த 11 அம்ச கோரிக்கைகள் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கையில் அறிவிக்க கோரியிருந்தது.

எங்களது கோரிக்கையினை 2026 திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் நல வாரியத்தில் பதிவு செய்து 60 வயதை கடந்த தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் 1200/ல் இருந்து 2000/ மாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும்,

முடிதிருத்தும் தொழிலாளர்கள் தங்கள் தொழிலை மேம்படுத்திகொள்ள நல வாரியத்தின் மூலம் தேவையான உதவிகள் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தேர்தல் அறிக்கையில்அறிவித்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னதை செய்யும் திராவிட மாடலின் அரசர், ஏழை, எளிய மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நெஞ்சில் தந்தை பெரியாராய், பேரறிஞர் அண்ணாவாய், கலைஞராய் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, முத்தமிழறிஞர் சென்னை முதல் குமரி வரை பட்டி தொட்டி எங்கும் நிறைந்திருக்கும் அனைத்து மருத்துவ குல தமிழ் சொந்தங்களின் சார்பாகவும்,

அனைத்து முடி திருத்தும் தொழிலாளர்களின் சார்பாகவும், தமிழ்நாடு ஹேர் ட்ரெஸ்ஸர்ஸ் யூனியன் சார்பில் மனம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், முடிதிருத்தும் தொழிலாளர் நல வாரியத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர் நியமனம் செய்ய வேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் குடியிருப்புகளில் மருத்துவர் சமுதாய முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு இட ஒதுக்கிடு அடிப்படையில் வீடு வழங்க வேண்டும்.

KKT திட்டத்தின் மூலம் வழங்கப்படும் மானியத்துடன் கடன் உதவி வயது வரம்பு 25 ஆக தளர்த்தவும் சுலபமாக கடன் உதவி பெறும் வகையிலும் திருத்தம் செய்திட வேண்டும்.

திருக்கோவில்களில் பணிபுரியும் நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்கள் மற்றும் மொட்டைஅடிக்கும் தொழிலாளர்கள் நிரந்தரஅரசு ஊழியராக்க வேண்டும், என்கிற கோரிக்கைகளை வேண்டுகோளாக வைக்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கல்லணை காத்தான்
### ஏப்ரல் 3 (2005)



தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.

ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஆட்சி செய்யக்கூடிய

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்ஆட்சி தொடர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

செஞ்சி ஏப்.3–
விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார்.

செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில்செஞ்சி கிழக்கு ஒன்றியம் மாவட்டம் பாடி, பாலப்பட்டு ஆகிய ஊராட்சியில்உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போதுவாக்காளர்களிடம் மாவட்ட கழகசெயலாளர் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏவாக்குசேகரித்து பேசுவையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் மகளிர் விடியல் பயணம்திட்டத்தை அறிவித்து இல்லம்தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் 48,புதுமைப் பெண் தமிழ் புதல்வன் திட்டங்களை அறிவித்துதொடர்ந்துகலைஞர் மகளிர் உரிமைத் தொகை,உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்திஅனைத்து தரப்பு மக்களுக்கும் ஆட்சி செய்யக்கூடிய முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மீண்டும் தொடர்வதற்கு வாக்காளர்கள் ஆகிய நீங்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்

நிகழ்ச்சியில்செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜய ராகவன், விழுப்புரம் மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரி கணேசன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் சூரிய மூர்த்தி,பாலப்பட்டு சண்முகம்,சக்திவேல், முத்துலட்சுமி, தேமுதிக மாவட்ட பொருளாளர் தயாநிதி, நிர்வாகிள்அருள் முருகன், விஜி, மனோகர், பிரபு, வி.சி.க.மாவட்ட செயலாளர் சிவா, நன்மாறன், மதிமுக செயற்குழு உறுப்பினர் தேனன், திமுக ஒன்றிய நிர்வாகிகள் வாசு அய்யாதுரை, இக்பால், ஊராட்சி மன்ற தலைவர், தனலட்சுமி அன்பழகன், ஊராட்சி நிர்வாகிகள் ஜெய்சங்கர், ஜெயபால், காசி, அன்பழகன், முனுசாமி,சுப்பிரமணி, பரமசிவம், சுப்பரமணி, முஸ்தபா, உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. மாதவன்
### ஏப்ரல் 3 (2018)



திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கியக் காரணமாக இருந்தவர்.

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறைகளின் அமைச்சராகப் பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்திக் காட்டியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**